# மணப்பாறை நகராட்சி

**2019- ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ( 20.08.2019) 20 – ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 04.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

<table>
<tr><th>மன்ற கூட்டம் நடைபெற்ற நாள்</th><th>வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள்</th><th>தீர்மானம்</th></tr>
<tr><td>20.08.2019</td><td>பொருள் – 1<br>இந்நகராட்சியில் மூன்றாண்டு குத்தகை இனங்கள் வருகின்ற 20.08.2019 அன்று மறு பொது ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட விளம்பரத்தினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலரின் ந .க.எண்.3/2019 செ.ம.தொ.2019 நாள்.06.08.2019 தேதிய கடிதத்தின்படி 07.08.2019ல் தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான தொகை ரூ .5376/- ஐ M/S. அட்வேவ் அட்வர்டைசிங் நிறுவனத்திற்கு வழங்கவும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.025/2018/அ2)</td><td>தீர்மான எண்.588<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>20.08.2019</td><td>பொருள் – 2<br>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் , தஞ்சாவூர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படி இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் அபாயகரமான கழிவுகளை மேலாண்மை செய்ய Incinerator நுண்ணுரக்குடில் அருகே அமைக்க அறிவுறுத்தியதன்பேரில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன<br><table><tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>தொகை</th></tr><tr><td>1</td><td>ஞானம் என்விரோன்மெண்ட் சர்வீஸ், தஞ்சாவூர்</td><td>99,120/-</td></tr><tr><td>2</td><td>கிரீன் என்விரோன்மெண்ட் சர்வீஸ், தண்டலம்</td><td>1,02,020/-</td></tr></table></td><td>தீர்மான எண்.589<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | மேற்காணும் இரு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஞானம் என்விரோன்மென்ட் சர்வீஸ், தஞ்சாவூர் நிறுவன ஒப்பந்தப்புள்ளியை ஏற்க கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>அனுமதிக்கலாம்<br>(1159/2019/எச்1) | |
| 20.08.2019 | **பொருள் – 3**<br>மணப்பாறை நகராட்சி திறந்தவெளி மலம் கழித்தலற்ற நகராட்சி (ODF) என அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தற்போது திறந்தவெளி மலம் கழித்தல் மற்றும் திறந்தவெளி சிறுநீர் கழித்தல் அற்ற நகராட்சி என அறிவிக்கும் பொருட்டு பொதுமக்கள் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் பெறும் பொருட்டு 07.08.2019 அன்று மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறை மூலம் தினமலர் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது . எனவே மேற்காணும் விளம்பரம் மேற்கொண்டமைக்கான செலவினம் ரூ .2890/- சம்மந்தப்பட்ட விளம்பர நிறுவனத்திற்கு அட்வே ட் அட்வர்டைசிங் பிரைவேட் லிட், சென்னைக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. அனுமதிக்கலாம்<br>2.மேற்காணும் செலவினம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம் | **தீர்மான எண்.590 அனுமதிக்கப்பட்டது.** |
| 20.08.2019 | **பொருள் – 4**<br>இந்நகராட்சியில் இயங்கிவரும் 5KVA UPS Numeric Company வாயிலாக DGS&D Rate மூலம் 05.09.2019 அன்று இந்நகராட்சியில் வாங்கப்பட்டு நாளது தேதிவரை நல்ல நிலையில் இயங்கி வருகிறது. அதனுடைய பேட்டரி 5 ஆண்டுகள் மட்டுமே சிறந்த நிலையில் இயங்கும் என்வும், 05.09.2018 அன்றுடன் 5 ஆண்டுகள் முடிவடைந்த நிலையில் 30.05.2019ஆம் ஆண்டு ஆண்டு பராமரிப்பு பொறியாளர் பேட்டரி செயலிழக்கும் நிலையில் உள்ளதாகவும் சோதனை செய்து ஆய்வறிக்கை வழங்கியுள்ளார். இந்த UPS வாயிலாக பொறியியல் பிரிவு மற்றும் வரி வசூல் மையம் இயங்கி வருகின்ற நிலையில் உடன டியாக பழைய பேட்டரிகளை கொடுத்துவிட்டு வாங்கி நிறுவ விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.` | **தீர்மான எண்.591 அனுமதிக்கப்பட்டது.** |

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | Novateur Electrical & Digital Systems PVT Limited (NUMERIC), Trichy | 29,928/- |
| 2. | Grace Marketing, Trichy | 32,438/- |
| 3. | True Power Solution, Madurai | 34,968/- |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Novateur Electrical & Digital Systems PVT Limited (NUMERIC), Trichy நிறுவன விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

அனுமதிக்கலாம்

(8421/2012/இ1)

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**